**O.S.No. 225/2018**

**DW 1:** ஆறுமுகம் தேதி 07.04.2026

பிவாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

அ வ எண் 452/2015 வழக்கில் இவ்வழக்கு வாதி தங்கவேல் தரப்பினர் அல்ல. இவ்வழக்கில் சொத்திற்கு சம்மந்தப்பட்ட அனைவரையும் தரப்பினர்களா வாதி சேர்த்துள்ளார் என்றால் சரிதான். 13 முதல் 15 பிரதிவாதிகளை தரப்பினர்களாக சேர்க்கப்பட்ட பிறகு என்னுடைய எதிர் வாதத்தை ஏற்று கொண்டார்கள் என்றால் சரிதான். அவர்களுக்கும் சேர்த்து நான் சாட்சியம் அளிக்கவில்லை. அவர்கள் தனியாக சாட்சியம் அளிப்பார்கள். அவர்கள் தனியாக சொத்தை அனுபவிப்பதாக ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். தனியாக அனுபவிக்கவில்லை. 13 முதல் 15 பிரதிவாதிகள் வாதியின் சகோதரி பாக்கியத்தின் வாரிசுகள். பாக்கியம் இறப்பதற்கு முன்பே அவருடைய பங்கை பொறுத்து விடுதலை கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. பாக்கியத்தின் வாரிசுகள் நாகராஜபுரம் தலவமலை அரச்சலூரில் குடியிருக்கிறார்கள். பாக்கியம் சொத்தை அனுபவித்ததாக எந்த ஆவணமும் இல்லை அவருடைய தந்தை பெயரில் தான் ஆவணங்கள் உள்ளது. செங்கோடகவுண்டர் மற்றும் என் தந்தை பொது அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றும் பாகப்பிரிவினை நாளதுவரை ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எங்களுக்கிடையே ஏற்படுத்ததி கொண்ட பத்திரங்கள் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. செங்கோடகவுண்டர் பொதுவில்வாங்கிய பின்னிட்டு பொதுவில் தான் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. வருவாய் துறை ஆவணங்களும் பொதுவில் கூட்டுபட்டாவாக தான் இருக்கிறது என்றால் சரிதான். வாதியின் பங்கை பிரித்து கொடுக்க நான் ஆட்சேபணை செய்ய இயலாது என்றால் சரியல்ல. பொய்யான எதிர் வாதம்

செய்கிறேன் என்றும் வாதியின் பங்கு வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.